★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 9உ செவ்வாய் (24—7—56) ★ ★ வெளியீடு: ஆடி 10உ புதன் (25—7—56) [இதழ் 34

இந்தியாவிலும் தூக்குத் தண்டனையை ஒழிக்க!

மாநிலங்கள் சபையில் தீர்மானம்

இந்தியாவில் தூக்குத் தண்டனையை ஒழித்துவிட வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்று, வரும் ஜூலை 30-ல் மாநிலங்கள் சபை கூடும்போது கொண்டுவரப்படவிருக்கிறதாம்.

இந்தத் தீர்மானத்தை பாபு கோபிநாத் சிங் தந்திருப்பதாகவும், அது ஆகஸ்டு 3ந்தேதி விவாதத்திற்குவரும் என்றும் கூறப்படுகிறது.

'மொழிப் பிரச்சினையில் சிந்தனைக் குழப்பம்'

'வட்டார மொழிகளை வற்புறுத்தினவர் வாய்மூடி இருக்கும் விந்தை'

'மக்கள் சபை முடிவிற்குப் பின்னரும் இருந்துவரும் திகைப்பு'

ஆட்சி மொழிக் குழு உறுப்பினரின் ஆய்வுரை

"கல்வி, நிர்வாகம், நீதி ஆகிய துறைகளில் இந்தி மொழிக்குரிய இடத்தை வரையறுப்பதில், மேற்குறித்த மூன்று துறைகளிலும் ஈடுபாடுடைய செல்வாக்குப் படைத்தவர்களிடை 'சிந்தனைக் குழப்பம்' ஏற்பட்டுள்ளது.

"புத்திசாலித்தனமாகவும், துணிந்தும், திட்டவட்டமாகவும், மொழிப் பிரச்சினையில் முன்பொருகால் கருத்தறிவித்த அறிஞர்களிடம் காணப்பட்ட ஆர்வம், இன்று குறிப்பிடத்தகுந்த வகையில் குன்றிப்போய் கிடக்கிறது."

பல்வகையான இந்திப் பரீட்சைகளில் தேறியவர்களிடை பேசிய பேச்சில், ஆட்சி மொழிக் குழு உறுப்பினரான மகன்பாய் தேசாய் என்பவர் மேற்குறித்துள்ள கருத்தை அறிவித்துள்ளார்.

'அரிசன்' வார இதழ்களின் முன்னாள் ஆசிரியரான மகன்பாய் தேசாய், தனது கருத்துக்கு எடுத்துக்காட்டுகளாகப் பின்வரும் உண்மைகளைச் சுட்டிக் காட்டியுள்ளார்:—

"இந்தியப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள், 'இப்பொழுதுள்ள ஆங்கில பயிற்சி மொழிக்குப் பதிலாக வட்டார மொழிகளைப் பயிற்சி மொழிகளாகக் கொள்வதே சிறந்த ஏற்பாடாகும்' என, 1950—51ம் ஆண்டிலேயே முடிவு கட்டினார்கள்.

"அதுபோன்றே, இராதாகிருஷ்ணன், தாராசந்த் குழுக்களின் சிபாரிசுகளும், 'வட்டார மொழிகளைப் பல்கலைக் கழகங்களின் போதனை மொழிகளாகக் கொள்ள வேண்டும்' எனத் திட்டவட்டமாகக் கூறி உள்ளன.

"காங்கிரஸ் செயற் குழுவும், பல்கலைக் கழகங்களின் போதனை மொழியாக வட்டார மொழிகளே இருக்க வேண்டும் எனத் தீர்மானித்து இருக்கிறது.

"செயற் குழுவின் இத்தீர்மானத்தை, தனது ஆட்சிக் கொள்கையாக மக்கள்சபை மூலம் ஆக்கிக்கொண்டும் இருக்கிறது இந்தியப் பேரரசு!

"இவ்வளவிற்குப் பிறகு, குறிப்பிட்ட இக்கருத்தில் இப்பொழுது குறிப்பிடத் தகுந்த முறையில் ஆர்வம் குன்றிப்போய் இருக்கிறது.

"இந்த ஆர்வக் குறைவு, இந்தி மொழியின் வளர்ச்சிக்குப் பெருந்தீங்காக முடியும்.

"நிர்வாகத்திற்கும், கல்வி போதனைக்கும் வட்டார மொழிகளைக் கொள்ளுவதே உகந்த மார்க்கமாகும்."

பம்பாய் கிளர்ச்சியை கேலி செய்தாராம் கெர்!

திலகர் காலக் கிளர்ச்சியை ஒப்புவமை காட்டினாராம்

கூட்டத்தினர் ஆரவாரம்

பம்பாய், ஜூலை 23—

திலகரின் நூறாவது பிறந்த நாள் விழா கொண்டாடப்படுகையில், திலகர் காலத்திய கிளர்ச்சிகளையும், இந்தக் காலத்தில் நடைபெறும் கிளர்ச்சிகளையும் ஒப்பிட்டு, இந்தக் கால கிளர்ச்சிகளைக் கேலி செய்தாராம், இந்தித் திணிப்புக் குழுத் தலைவரான பி. ஜி. கெர்!

உடனே கூட்டத்திலிருந்தவர்கள் கூச்சல் எழுப்பி, கைதட்டி ஆரவாரம் செய்து, கெர் கூறியதைக் கேட்க மறுத்து, அவரைத் தொடர்ந்து பேசவிடாது செய்ய முயற்சித்தனராம்!

'சத்தியாக்கிரகம்' என்ற அரசியல் ஆயுதத்தை, சிலர் தவறான வழிகளில் உபயோகிப்பதாக அவர் கூறினாராம்!

கேலியையும் கிண்டலையும் பொருட்படுத்தாது கெர், தனது குரலை உயர்த்தி, 'இதுதான் உண்மை; அதனைச் சொல்லியே தீரவேண்டும்' என்று கூறினாராம்!

கூட்டம் முடிந்ததும், கெர், எஸ். கே. படீல் ஆகியோரின் கார்களை, கூடியிருந்தோர் சூழ்ந்து கொண்டனராம்; ஆனால், போலீசார் கூட்டத்தை விலக்கி, கார்களுக்கு வழிசெய்து தந்திருக்கின்றனர்; கூட்டம், சம்யுக்த மராட்டிய கோஷங்களை எழுப்பியது.

திலகர் உயிரோடிருந்திருந்தால் பம்பாயைத் துண்டாட விட்டிருக்கமாட்டாராம்!

குல்லூகபட்டரின் விஷமப் பேச்சு

திலகரின் குணச்சங்கள் குறித்து விளக்கம்

சென்னை, ஜூலை 23—

"பாலகங்காதர திலகர் உயிரோடு இருந்திருந்தால், இன்று அவர், பம்பாய் மாநிலத்தைத் துண்டாடுவதற்கு [illegible] முக்க [illegible],

என்று ஆச்சாரியார் அவர்கள் கூறினாராம்!

வேப்பேரியில் உள்ள மராட்டிய மண்டல் நடத்திய திலகர் நூற்றாண்டு விழாவில் பேசும்போது தான் அவர் அப்படிக் கூறினாராம்.

"குறுகிய நோக்கம் கொண்டவர்களாக மராட்டியர்கள் இருக்கவேண்டாம்; இந்தியா முழுவதையும் அவர்கள், ஒருசேர எண்ணிப் பார்க்கட்டும். பிரிவினை வரப் போகும் இந்த நேரத்தில் மராட்டியர்கள் தங்கள் முடிவு குறித்துச் சிந்திக்கட்டும்; புனர் பரிசீலனை செய்யட்டும்,"

என்றும் உபதேசித்தாராம் இந்தப் பெரியவர்!

திலகருடன் தனக்கிருந்த தொடர்பு குறித்துப் பேசிவிட்டு ஆச்சாரியார் தொடர்ந்து பேசகையில் குறிப்பிட்டதாவது:—

"திலகர் ஒரு பெருந்தலைவராக மதிக்கப்பட்டவர். அரவிந்தர், லாலா லஜபதிராய், பெபின் சந்திர பால் ஆகியோர் அவரது சீடர்களாக இருந்தவர்களாவர்

"திலகர் பலமுறை சிறைப்பட்டிருக்கிறார். திலகர் ஒரு தீவிர வாதியாகவும், புரட்சிக்காரராகவும் ஆட்சியாளரால் கருதப்பட்டார்; ஆனால், அவரைப் பற்றிய இந்தக் கருத்து தவறானதாகும்; ஏனெனில், அவர் ஒரு ஈயைக்கூட துன்புறுத்தமாட்டார்; அவர் அத்தனை உதார புருஷராக விளங்கினார். ஆனால் அவரது அரசியல் கருத்துக்கள் வேறுவிதமாக அமைந்திருந்தன.

"இந்தியாவில் ஆட்சி செலுத்துவதற்கு பிரிட்டிஷாருக்கு எந்தவித உரிமையும் கிடையாதென அவர் உணர்ந்தார்; எனவே, வெளிநாட்டவரை விரட்டுவதற்குப் புரட்சியிலீடுபடுவதுகூடத் தவறில்லை என்று வாதிட்டார். 'சுயராஜ்யம்' என்றால், முழுச் சுதந்திரம் என்று எடுத்துரைத்தார்; அதனால்தான் அவர் ஒரு தீவிரவாதியெனக் கருதப்பட்டார்.

"வாழ்க்கையில் அவர் கொண்ட கொள்கைகளுக்காக, சொல்லொணாத் துயரங்களை அனுபவித்திருக்கிறார்.

"அவரை, சாவு அணைத்துக் கொண்டபோது, காந்தியார் நுழைந்தார். காந்தியாரையும்—திலகரையும் ஒப்பிட்டுப் பேசக்கூடாது. ஏனெனில், காந்தியார் திலகருக்குப் பிறகு 13 ஆண்டுகள் கழித்து வந்தார்; இந்த 13 ஆண்டுகளில் உலகம் எத்தனையோ முன்னேறி, மாறிவிட்டிருந்தது."

வ. உ. சி.-யின் இல்லம்

[illegible] க்கப்படும்

தூத்துக்குடி, ஜூலை 24—

'ஒட்டப்பிடாரத்தில், வ. உ. சிதம்பரம் (பிள்ளை) வசித்துவந்த இல்லமும், காலி மனையும் வாங்கப்பட்டு, தேசிய நினைவுச் சின்னமாக பாதுகாக்கப்படும்' என்று, சென்னை முதலமைச்சர் காமராசர் கூறியுள்ளாராம்! இத்திட்டத்திற்கு, சென்னை கவர்னர் ரூ. 5,000 தந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டாராம்.

இந்த எதிர்ப்புப் புரியவில்லையாம்!

'அனைத்தும் புரிந்த' காமராசர் கூறுகிறார்!

இந்தியைத் திணிக்க சதியேதும் இல்லையாம்— அதுதான் இந்தியாவின் பொது மொழியாம்!

சுதந்திரத்திற்கு முன்பே காந்தியார் வற்புறுத்தினாராம்

தமிழர் உட்பட அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டுமாம்

தூத்துக்குடி, ஜூலை 23—

'இந்த எதிர்ப்பு ஏன் என்று எனக்குப் புரியவில்லையே?' என்று அங்கலாய்த்துக்கொண்டாராம், காமராசர்!

"ஏதோ, வேறு எல்லா எதிர்ப்புகளையும் ஐயந்திரிபர உணர்ந்துகொண்டு, அவற்றைச் சமாளிப்பதற்குரிய இராஜதந்திர, போர்த்திற வழிகளை எல்லாம் வகுத்து வைத்துக்கொண்டிருப்பவர்போலவும், இந்தியை எதிர்ப்பதற்குரிய காரணம் மட்டும் தனக்குப் புரியவில்லை என்பதுபோலவும் பேசியிருக்கிறார், காமராசர்!

"நாட்டின் பெரும் பகுதி மக்களால் பேசப்படும் இந்தி மொழியில், தமிழர் உள்பட அனைவரும் அறிவு பெற வேண்டியது அவசியமாகும்; தமிழ் நாட்டில் சிலர், இந்தியை ஏன் எதிர்க்கிறார்கள் என்பதே எனக்குப் புரியவில்லை?

"சில தலைவர்கள் கூடி சதி செய்து, இந்தியை இதரர் மீது திணிக்க திடீரென முடிவெடுத்துவிட்டதாகக் கொள்வதற்கு இல்லையே!

"சுதந்திரம் பெறுவதற்கு முன்பாகவே காந்தியார், இந்தியாவிற்கு ஒரு பொது மொழி தேவை என உணர்ந்து வற்புறுத்தி வந்திருக்கிறார்; எனவே, இயற்கையாகவே பெரும்பான்மையினரால் பேசப்படும் இந்தி மொழி பொது மொழியாக்கப்படுகிறது,"

என்றெல்லாம் பேசினாராம், இந்தப்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 24—7—'56 செவ்வாய்

துர்நாற்றம்!

"நாங்கள் முதலாளிகளை ஆதரிக்கும் கட்சி என்று குற்றங் கூறுகிறார்கள்; ஆனால், நாங்கள்தான் முதலாளிகளிடமிருந்து பெரும் பணத்தை வரியாகக் கறந்து விடுகிறோமே! பின், முதலாளிகளை ஒழிக்க வேண்டும் என்று ஏன் பேசுகிறார்களோ தெரியவில்லை?"

என்று சென்னை மாநில முதன் மந்திரி பதவியிலமர்ந்திருக்கிற 'ஞான சூரியன்'—காமராசர், போகிற இடமெல்லாம் பேசி வருகிறார்.

'முதலாளிகள் அடிக்கிற கொள்ளை இலாபம் இந்த நாட்டு மக்களின் உழைப்பின் விளைவாயிற்றே!—அது, இந்த நாட்டு மக்களுக்கு உரியதாயிற்றே!—அது மக்களுக்குக் கிடைக்குமாறு செய்யவேண்டியது, மக்களின் பெயரால் ஆட்சி செலுத்துவோரின் தவிர்க்க முடியாத கடமையாயிற்றே'—என்று நாம் எடுத்துக் காட்டும்போதெல்லாம், காமராசர், 'முதலாளிகள், முதலாளிகள் என்று பேசுகிறார்கள்; பாவம், அவர்களிடமிருந்துதான் இலாபத்தையெல்லாம் வரிப் போட்டு வாங்கிவிடுகிறோமே' என்று பதில் கூறுவதற்குத் தயங்கவில்லை. அதுவும், தி. மு. கழகம் தேர்தலில் போட்டியிடும் என்ற முடிவுக்குப் பிறகு, காமராசர் வாய் மலர்ந்தபோதெல்லாம், இந்தக் 'கருத்து' உதிரத் தவறியதே இல்லை எனலாம்.

ஆனல் காமராசரும், அவர் தனது ஞானத் தாய்தந்தைய[illegible]ளராக— எஜமானர்கள[illegible]டிருக்கும் நேரு பண்டிதர் குழாம், முதலாளிகளிடமிருந்து வரி வசூலிக்கும் இலட்சணம், மக்கள் சபையில் சிரிப்பாய் சிரித்திருக்கிறது.

ஆயிரக்கணக்கில்—இலட்சக்கணக்கில் வருமானமுடையவர்களிடமிருந்து வருமான வரி வசூலிக்கப்படுகிறது. இந்த வருமான வரி, சுமார் 200 கோடி முதல் 300 கோடி ரூபாய் வரை சர்க்காருக்குத் தரப்படாமல் ஏமாற்றப்படுவதாக—மோசடி செய்யப்படுவதாகப் பிரிட்டிஷ் பொருளாதார நிபுணரான கல்டார் என்பார் டில்லி சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார் என்ற விபரம், மக்கள் சபையில் டில்லி 'ரெவினியூ' இலாகா மந்திரியினல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முதலாளிகளும் பெருவருமானமுடையோர்களும், கோடிக்கணக்கான ரூபாய்க்குச் சாத்திய நாமம் ஒளியோடு பிரகாசித்துக்கொண்டிருக்கிறது, டில்லி சர்க்காரின் நெற்றியில்! காமராசர், காங்கிரஸ் சர்க்காரின் வீரதீர பராக்கிரமத்தைப் பற்றியும் திருக்கல்யாண குண விசேடங்களைப் பற்றியும், 'நாமாவளி' பாடிக்கொண்டிருக்கிறார். வேடிக்கையாக இருக்கவில்லை—வேதனையாக இருக்கிறது காட்சி.

ஏழை எளியோரிடமிருந்து வஜா செய்வதற்கு, அடிக்கடி இலக்காகிவிடுகிற நில வரி போன்ற வரிகளை வசூலிப்பதில், இந்த 'ஏழைப் பங்காளர்கள்' காட்டுகிற கெடுபிடி — நடத்துகிற அதிகார ஆர்ப்பாட்டம் சொல்லுந்தரமல்ல. அசையும்பொருள் ஏலத்தில் விடப்படும் என்ற அறிவிப்பு; ஒட்டை மிகுந்து ஒழுகும் குடிசையின் தென்னங்கீற்றுக் கதவுகளையும், உடைந்துபோன அம்மி ஆட்டுக்கல்லையும் தூக்கி வந்துவிடும் காட்சி; தாலியை விற்றேனும் வரிகட்ட வேண்டும் என்று உபதேச பாணியில் மிரட்டல் எல்லாம், ஏழை எளியோரிடத்தில்தான்.

கொள்ளை கொள்ளையாய் இலாபம் சம்பாதிப்போர், வருமானமுடையோர் இவர்களிடமெல்லாம் அந்தக்கெடுபிடி ஆர்ப்பாட்டங்கள் செல்லுவதில்லை என்பது மட்டுமல்ல, சர்க்கார் தீட்டியுள்ள சட்டத்தின் ஓட்டைகள், வரி தரவேண்டியவர்களுக்குப் பாதுகாப்பும் தருகின்றன.

"வருமானவரி 'டிமிக்கி'யைக் கண்டுபிடிக்க என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது குறித்துச் சர்க்கார் ஆலோசனை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்"—என்று காடியாகிப் போய்விட்ட பழம் பதிலையே டில்லி மந்திரி, மக்கள்சபையில் தெரிவித்திருப்பதும், 'வருமான வரி இலாகாவின் நடைமுறையை ஆராய்ந்து, அதன் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுவதற்கான யோசனைகளைக் கூறுவதற்கென ஒரு [illegible]ரணைக் குழுவை நியமிக்க [illegible] என்ற எதிர்க் கட்சி [illegible] ஒருவர் கொண்டு வந்த மசோதாவை ஏற்க அந்த மந்திரி மறுத்ததும் சர்க்காரின் நல்லெண்ணத்தைச் சந்தேகிக்க உதவுகின்றன. இந்த வரி மோசடி பற்றி விசாரணை நடப்பதை சர்க்கார், திறந்த மனதோடு விரும்பவில்லை என்பதைத்தானே டில்லி சர்க்காரின் போக்கு எடுத்துக்காட்டுகிறது?

சர்க்கார் ஏழை எளியோரின் வரிச் சுமையை அதிகரித்துக்கொண்டே போகும் பல கோடி ரூபாய் வருமானத்தை இப்படிப் பாழாக்கிக்கொண்டு, முதலாளிகளுடையவும் பெருந்தனக்காரர்களுடையவும் 'நலன்' களுக்குப் பாதுகாப்புத் தருவதும்தான், காங்கிரஸ் வகுத்த ஆவடி 'மாதிரி சோஷலிச சமுதாயத்'தின் இலட்சணம் போலும்.

பொய்க்கணக்கு எழுதுவதோடு இந்த வரி ஏமாற்றுவோர்; வரி வசூலிக்கும் அதிகாரிகளையும் 'சரிக்கட்டி'க் கொள்கின்றனர் என்பதையும் வெட்கம் துளியுமின்றி ஒரு மந்திரி, மக்கள் சபையில் ஒப்பியிருப்பது காங்கிரஸ் மேதாவிகளின் 'நிர்வாகப் பாரம்பரியப் பெருமை'க்கு ஒரு எடுத்துக்காட்டாக அமையக்கூடியதாகும்.

இவர்கள் வரி வசூலிக்கிற இலட்சணம் இது! இந்த அவலட்சணமான ஊழல்களைத் தோளில் சுமந்து கொண்டே, 'காங்கிரஸ்தான் ஏழைகளை வாழ்விக்கும்; முதலாளிகளை வரிபோட்டு வாட்டும்'—என்று காமராசர் பேசுகிறார். அவர் பேச்சு, நாற்றமடிக்கிறது—துர்நாற்றம்!

நைஜீரியாவில் நெருக்கடி!

பிரிட்டிஷ் காலனி மந்திரியின் போக்கே காரணம்

"அரசாங்க நிதிகளை முதலீடு செய்யும் பிரச்சினையில், கவர்னரோ அல்லது காலனி மந்திரியோ இடுகின்ற கட்டளையை ஏற்க நானும், எனது சக மந்திரிகளும் தயாராக இல்லை,"

என்று கிழக்கு நைஜீரியா பிரதமர் கூறியுள்ளார்.

"அக்கட்டளையை ஏற்பதைவிட மத்திய அரசாங்கத்திலும், பிராந்திய அரசாங்கங்களிலும் எங்களுடைய பதவிகளை இராஜிநாமா செய்துவிட்டு, 'காலனி காரியாலயமே யதேச்சையாக ஆளட்டும்' என்று விட்டுவிடுவதற்கு நானும் பெடரல் சர்க்காரிலுள்ள மந்திரி சபை சகாக்களும் தயாராக இருக்கிறோம்" என்றும் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

ஆப்பிரிக்கா காண்டினென்டல் பாங்கியில் சர்க்கார் பணத்தைப் போட்டுவைக்க வேண்டும் என்று பிரதமர் கூறுகிறார்; ஆனல், கவர்னரும், காலனி மந்திரி இலாகாவும் பிரிட்டிஷாருக்குச் சொந்தமான மேற்கு ஆப்பிரிக்கா பாங்கியில் பணத்தைப்போட வேண்டுமென்று கூறுகிறார்கள். இதனல், கிழக்கு நைஜீரியா அரசியலில் நெருக்கடி எழுந்துள்ளது.

நீலகிரியில் குழந்தை உணவு உற்பத்தி

நீலகிரியில் சுமார் 12 இலட்சம் செலவில் குழந்தைகளுக்கான உணவு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று துவங்கப்படலாம் என்ற தகவலை, சூசகமாக மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

ஐரோப்பாவில் அண்மையில் நீண்டதொரு சுற்றுப்பயணம் செய்து திரும்பியுள்ள அவர், டென்மார்க் நாட்டில் உள்ள இது போன்ற குழந்தை உணவு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று, தனது இயந்திர சாதனம், தொழிலாளர்கள் கொண்டு ஒரு தொழிற்சாலையைத் துவங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும், ஆனல் முதலீட்டிற்குத் தகுந்த இலாபம் வேண்டும் என்று கோரியுள்ளதாகவும் தெரிவித்திருக்கிறார்.

தெரிந்து கொண்டீர்களா?

நியூயார்க், ஜூலை 22—

ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பூமிக்குள் தண்ணீர் இருக்கிறது என்பதைக் கண்டு பிடிப்பதற்கு செய்ரோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த எம். ஏ. எச். அல்சயத் ஒரு புதிய வழியைக் கண்டு பிடித்திருக்கிறார்.

அவர், ரேடியோ அலைகளைப் பூமிக்குள் செலுத்தி தண்ணீர் இருப்பதைக் கண்டு பிடிக்கிறார். அவர் ஏவிவிடும் ரேடியோ அலை சிறிது தூரம் பூமியின் மேல்மட்டத்தில் சென்று, பிறகு, பூமிக்குள் தண்ணீர் இருக்கும் இடம் வரை துளைத்துச் சென்று, தண்ணீரை அடைந்த பிறகு அதன் பிரதிபலிப்பை வெளியே தெரியப் படுத்துகிறது. தண்ணீர் எவ்வளவு ஆழத்தில் இருக்கிறதென்பதும் கணக்கிடப்படுகிறது.

'வள்ளுவரே நம் வழிகாட்டி'

'விழாவெடுப்பீர்! எழுச்சி பெறுவீர்!'

'குறள் பயின்று உயர்நெறி நின்று வாழ்வீர்!'

வள்ளுவர் வார விழாவில் அன்பழகன் அறிவுரை!

"நம் சமுதாயம் பன்னெடுங்காலமாகவே மூட நம்பிக்கையில் ஊறிவிட்டிருக்கிறது; மூடநம்பிக்கையையே விடாது கடைப்பிடித்து வந்திருக்கிறது; இந்த மூடநம்பிக்கையை விட்டுவிலகி, துணிந்து அறிவுடன் காரியமாற்றினல்தான் முன்னேற வழி இருக்கிறது; மறுமலர்ச்சிக்கு மார்க்கம் இருக்கிறது!

"ஒரு கிராமப்புறத்திலே வண்டி போகும் பாட்டையொன்று செல்கிறது. மழை காலத்திலே மழை பெய்து அந்த பாட்டை தண்ணீரும் சகதியுமாக இருக்கிறது. அப்பாதையில் பத்துப் பதினைந்து பேரடங்கிய வண்டியொன்று செல்லும் போது, தண்ணீர் நிரம்பிய சகதியிலே சகடம் புதைந்து வண்டி வேகமாகச் செல்ல முடியவில்லை. இந்நிலையில் வண்டியை இன்னும் வேகமாக ஓட்ட முனைந்தால், சக்கரம் சேற்றிலே ஆழமாகப் பதியுமே தவிர வண்டி நகராது. வண்டி மேலே செல்ல வேண்டுமானல் வண்டியிலுள்ளோர் இறங்கிவந்து தள்ள வேண்டும். சேற்றில் புதைந்துள்ள சக்கரம் தண்ணீரையும், சகதியையும் கடந்து செல்ல பத்துப் பதினைந்துபேர் தள்ள வேண்டும்; அப்போதுதான் வண்டி நல்ல நிலையில் ஓட ஆரம்பிக்கும்.

"அதேபோலத்தான் நமது சமுதாயம் பன்னெடுங்காலமாகவே பழைமையில் ஊறி, அறிவு கெட்டு, மூடநம்பிக்கையை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டுள்ளது. நமது சமுதாயம் முன்னேற வேண்டுமாயின் நாம் துணிந்து, மூடநம்பிக்கையை விட்டுவிலகி, அறிவால் ஆராய்ந்து எதையும் மேற்கொள்ள வேண்டும்.

"கல்லூரிகளிலே திருக்குறள் படிக்காத காரணத்தினல்—ஓய்வு நேரத்திலே குறளைப் படிக்காத காரணத்தால்—தமிழ் ஏடு படிக்காத காரணத்தால் நாம் வள்ளுவரை மறந்திருந்தோம். இன்று ஆங்காங்கே குறளின் பெருமையை உணரத் தலைப்பட்டுள்ளார்கள். ஒரு சிறு பொறி பறக்கிறது என்று எண்ணுகிறேன்! அது பெருந்தீயாக உருக்கொள்ளும்! ஏழை சிந்திக்க ஆரம்பித்தால், பாட்டாளி திருக்குறளின் கருத்துக்களை எண்ண முயன்றால் சமுதாயத்திலே ஓர் புரட்சியே மூளும்! அவர்களை அடக்கி ஒழிக்கமுடியாது, வள்ளுவர் பரவுகிற காரணத்தால்! நாம் வள்ளுவரிடத்திலே விரும்புகிற இலட்சியத்தை தெளிவாக வேறு யாரிடத்திலும் காணமுடியாது.

"நாம் ஒளியை கையில் வைத்துக்கொண்டே அறியாமல் எங்கெங்கோ தேடினேம்—இன்று நம் கையிலுள்ள ஒளியை அறிகிறோம்! அதைக் கொண்டு சமுதாயத்திலே படர்ந்திருக்கும் அறியாமை இருளை அகற்ற நாம் முனையவேண்டும்!

"சமுதாயத்திலே மலிந்திருக்கிற சிக்கல்கள், உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற சாதிக் கொடுமை, மத வேறுபாடுகள்—இவை யாவற்றிற்கும் மாற்றம்காண வள்ளுவரை விட்டால் வழியில்லை! பொருளாதாரத் துறையிலும், முதலாளி—தொழிலாளி போன்ற பேதத்தை அகற்றவும் மற்ற எல்லா துறைகளிலும், நமக்கு வள்ளுவரை விட்டால் வேறு வழியில்லை!"

—என்று 21—7—56-ல், சென்னை—கொருக்குப்பேட்டை கிருஷ்ணசாமி தோட்டத்தில், திருவள்ளுவர் முன்னணிக் கழகச் சார்பில், வள்ளுவர் வாரமும்—கழக ஆண்டுவிழாவும் நடைபெற்றபோது, தோழர் க. அன்பழகன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"நமது சமுதாய மக்கள் 'செக்கு மாட்டுப் புத்தி கொண்டோர்' என்றார், புரட்சிக்கவி பாரதிதாசன். அதை மாற்றியமைக்க வேண்டுமென்கிறார் வள்ளுவர்! புதிய சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்கிறார் திருவள்ளுவர்! அதற்கு, அவர் இரண்டு வழிகள் கூறுகிறார்; அதைப் பின்பற்றி மாற்றம் காணச் செய்கிறார்; அவர் கூறும் வழிகளில் ஒன்று அறிவு; மற்றது துணிவு!

"எப்பொருள் எத்தன்மைத்
தாயினும்—அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்கிறார் வள்ளுவர். எந்த ஒரு பொருள் எப்படிப்பட்டதாயிருப்பினும், அந்தப் பொருளில், சிந்தித்து ஆராய்ந்து அப்பொருளின் உண்மையான இயல்பைக் காணுவதே அறிவு என்கிறார். அதை மட்டும் வள்ளுவர் கூறவில்லை; மற்றொன்றையும் கூறுகிறார்—

"எப்பொருள் யார் யார் வாய்க்
கேட்பினும்—அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

எந்தப் பொருளைப் பற்றி எவர் பேசினலும், பேசுகின்றவரின் பேச்சில் அறிவு இருக்கிறதா இல்லையா? பேசுகிறவரின் கருத்து நம் கருத்துக்கு ஒத்திருக்கிறதா—மாறுபடுகிறதா?—என்பதை எண்ணிப் பார்க்கச் சொல்கிறார் வள்ளுவர்.

"பேசுகிறவர் யாராயிருந்தாலும் சரி—அவர் கிரேக்க அறிஞர் சாக்ரடீசாயிருந்தாலும், பிச்சையெடுக்கிற சன்னியாசியாயிருந்தாலும் அவர் பேச்சிலே அறிவுக்கேற்ற கருத்து இருக்கிறதா இல்லையா என்பதை சிந்தித்து, முடிவை ஏற்றுக் கொள்ளச் சொல்கிறார் வள்ளுவர்.

"அடுத்ததாக, நெடுங்காலமாக நம்பிக்கையின் அடிப்படையில் செய்துவந்த காரியங்களை ஒதுக்கி விட்டு எண்ணித் துணியவேண்டுமென்கிறார்.

"எண்ணித் துணிக கருமம்—
துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

என்கிறார். ஒரு செயலைச் செய்ய வேண்டுமானல் நன்கு சிந்தித்து, அதன் தன்மைகளை ஆராய்ந்து, எண்ணி, பின்னர் துணியவேண்டும். நம்பிக்கையில் துணிவது தவறு என்கிறார், வள்ளுவப் பெருந்தகை!

"ஒன்றை ஆராயாமல் செய்துவிட்டு, 'பின்னர் பார்த்துக்கொள்ளலாம்; போகப் போகப் பார்ப்போம்' என்ற மனே நிலையை ஏற்கவில்லை. 'எண்ணித் துணியவேண்டும்' என்கிறார்; 'சமுதாயத்திலே ஓர் மறுமலர்ச்சி வேண்டும்' என்கிறார்; 'புதியதோர் சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும்' என்கிறார் திருவள்ளுவர்!

"வள்ளுவப் பெருந்தகை நம் வழிகாட்டி! வள்ளுவர் நமது நோயெல்லாம் போக்கும் மாமருந்து! வள்ளுவர் நம் குறையெல்லாம் தீர்க்கும் நிறை! நம்மைத் தெளியவைக்கும் அறிவுச் சுடர்! ஆகவேதான், வள்ளுவர் வாரத்தை

(4-ம் பக்கம் பார்க்க)

இந்திய இரயில்வேக்கள் சந்தித்த விபத்துக்கள்

மக்கள் சபையில் மந்திரி தகவல்

புதுடில்லி, ஜூலை 22— "இவ்வருடம் பிப்ரவரி மாதத்திலிருந்து மே மாதம் வரையுள்ள நான்கு மாதங்களில் மொத்தம் 1248 இரயில் விபத்துக்கள் ஏற்பட்டன," என்று, துணை இரயில்வே மந்திரி ஓ வி. அழகேசன், மக்கள் சபையில், கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

இவ்விபத்துக்களில் 41 பேர் மாண்டனரென்றும், இரயில்வே சொத்துக்கு ஏறக்குறைய ரூ. $6\frac{1}{2}$ இலட்சத்திற்குமேல் சேதமேற்பட்டிருக்கலாமென்றும் அவர் தெரிவித்தார்.

"461 விபத்துக்கள் இரயில்வே சிப்பந்திகளின் தவறுகளால் நேர்ந்தன; 58 விபத்துகள் இரயில்வே ஊழியரல்லாத பிறரால் நேர்ந்தன; 477 விபத்துகள் இயந்திரக் கோளாறுகளால் ஏற்பட்டன; பலதரப்பட்ட காரணங்களால் 116 விபத்துகள் ஏற்பட்டன; இன்னும் 89 விபத்துகள்பற்றி விசாரணை நடந்து கொண்டிருக்கிறது," என்றும் அவர் விவரங்கள் கூறியுள்ளார்.

அதிசயமே அதிசயம்!

மலைப் பாம்பு—நாகப் பாம்பு மல் யுத்தம்!

கள்ளிக்கோட்டை, ஜூலை 16— ஒரு மலைப் பாம்புக்கும்—நாகப் பாம்புக்கும் ஏற்பட்ட 'போரில்' அவை இரண்டும் பலியாக நேர்ந்தது.

புதுப்பாடி என்ற மலையடிவாரத்தில் 17 அடி நீளமுள்ள மலைப் பாம்பு ஒன்று ஏதோ மிருகத்தைச் சாப்பிட்டுவிட்டு, நகர முடியாமல் ஒரு இடத்தில் கிடந்தது.

அப்போது 16 அடி நீளமுள்ள நாகப் பாம்பு ஒன்று மலைப் பாம்பைத் தாக்கியது. மலை வீரன் சும்மா விடுவானா? தனது வாலை ஒரு மரத்தில் சுற்றிக்கொண்டு, நாகப் பாம்பை 'சுவாகா' செய்வதற்குத் துணிந்தது! இந்தப் போராட்டத்தைப் பக்கத்தில் சென்ற ஆபிரகாம் என்பவர் கண்டு, இரண்டு பாம்புகளையும் அடித்துக் கொன்றார்.

★

நாய்—நாகப் பாம்பு போர்!

மேலடியம்சம் சக்கிட்டகண்ட என்ற இடத்தில் ஒரு நாகப் பாம்புக்கும்—நாய்க்கும் நடந்த போரில் இரண்டும் பலியாயிற்று.

அந்த இடத்தில் சுமார் 9 அடி நீளமுள்ள நாகப் பாம்பைக் கண்ட பெண் பயந்து கூக்குரலிட்டாள்; பக்கத்திலுள்ளவர்கள் ஓடி வந்தனர். பாம்பைக் கண்டால் படையும் அஞ்சும் அல்லவா? அங்கு கூடியவர்கள் பாம்பின் மீது கல்லெறிந்து அதைத் துரத்தினார்கள். அப்போது அங்கு ஓடிவந்த நாய் ஒன்று, நாகப் பாம்புடன் போராடி அதைக் கொன்றது; ஆனால் சிறிது நேரத்தில் அந்த நாயும் செத்து மடிந்தது.

★

கருநாகத்தைக் கொன்ற நாய்களின் துணிச்சல்!

சென்னை-சேத்துப்பட்டில், ஒரு வீட்டின் பின்புறமுள்ள கொட்டகையில், ஆங்கில இனத்தைச் சேர்ந்த பசு ஒன்று கட்டப்பட்டு இருந்தது; திடீரென்று அந்த மாடு அலறும் சப்தத்தைக் கேட்டு அவ்வீட்டிலிருந்த இரு 'அல்சேஷியன்' நாய்கள் அங்கு ஓடிச்சென்று, மாட்டுக் கொட்டகையில் பெரியதோர் கருநாகம் ஒரு கல்லின் கீழ் மறைவதைப் பார்த்துள்ளன; உடனே ஒரு நாய் அப்பாம்பின் வாலைப் பிடித்து வெளியே இழுத்தது; மற்றொரு நாய் கல்லை நகர்த்தி, பாம்பின் முதுகெலும்பை முறித்து, தலையைக் கிழித்துக் கொன்றிருக்கிறது.

தெரிந்து கொள்ளுங்கள்!

நியூயார்க், ஜூலை 22— கண்ணுக்குத் தெரியாத மின்சார அலைகள் மூலமாகச் சில நிமிடங்களில் சமையல் செய்யக்கூடிய ஒரு அதிசய அடுப்பு அமெரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

மாமிசமாக இருந்தாலும், வேறு உணவாக இருந்தாலும் சில நிமிடங்களில் பக்குவம் செய்யப்பட்டுவிடும். அடுப்பிலிருந்து கிளம்பும் மின்சார அலைகள் பாத்திரத்தைச் சூடுபடுத்தாமல், சம்பந்தப்பட்ட உணவை மாத்திரம் வேகச்செய்து பக்குவப்படுத்திவிடும்.

இந்த மாதத்திலேயே இந்த அதிசய அடுப்பு விற்பனைக்குவரும் இதன் விலை அமெரிக்காவில் சுமார் ரூ. 5 ஆகும்.

பரம்பிக்குளம் நீர்த் தேக்கத் திட்டம்

ஒரு கண்ணோட்டம்

சென்னை, ஜூலை 21— கோவை மாவட்டத்தில், பரம்பிக்குளம் திட்டம் சம்பந்தமாக சென்னை—தி. கொ. பிரதம எஞ்சினியர்கள், பேச்சுவார்த்தை நடத்தியபின் சமர்ப்பித்துள்ள அறிக்கையை சென்னை சர்க்கார் பரிசிலனை செய்து வருகின்றனர்.

இப்போதுள்ள திட்டத்தின்படி சென்னை சர்க்கார், இம்மாநிலத்தில் கிடைக்கக்கூடிய தண்ணீரை, நீர்த் தேக்கம் நிர்மாணித்துப் பயன்படுத்த உத்தேசித்துள்ளனர்; பரம்பிக்குளம் திட்டத்தில், இது, முதல் கட்டமாகும்; அதன்பின், கோவை மாவட்டத்தின் மறுபுறத்தில்—தி. கொ. எல்லையில் நீர்த் தேக்கம் கட்டப்படும்.

இந்த நதியின் தண்ணீர் இரு மாநிலங்களில் ஓடுவதால், இரு சர்க்கார்களின் நலனையும் குறித்து ஒரு உடன்பாடு ஏற்படுவது அவசியமாகும்.

'அணுகுண்டு சோதனைகள் நடத்தி அண்டையிலிருப்போரிடை விஷம் பரப்புவது ஆண்டவனை நேசிப்பதாகுமா?'

பெவான் இடிமுழக்கம்

கார்வென், (வேல்ஸ்) ஜூலை 21— " 'பரமண்டலத்திலேயிருக்கும் எங்கள் பிதாவே! அமெரிக்க நாட்டினை ஆசீர்வதித்து அருளும்' என்று அடிக்கடி வேண்டிக்கொள்ளுகிறாரே—அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர்! அவரோ அல்லது அமெரிக்காவோ தங்களை ஒரு கிறிஸ்தவர் என்று எப்படிக் கூறிக்கொள்ள முடியும்? இவர்கள் பயங்கரமான அணு ஆயுதங்களை வெடித்து, அண்டையில் உள்ள மக்களிடையே விஷத்தைப் பரப்பிக்கொண்டிருக்கிறார்களே! கிறிஸ்தவப் பரம்பரையில் இதற்கு நியாயம் இருப்பதாக எவரும் காட்ட முடியுமா?

"உலகெங்கணுமுள்ள தேவாலயங்களில் இருப்போர், மதத் தலைவர்கள் எல்லாம் குறிப்பாக அமெரிக்க மதத் தலைவர்கள், அணு ஆயுத சோதனைகளைக் கண்டிக்காததின் மூலம் தேவ நிந்தனை செய்த குற்றத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று கூற விரும்புகிறேன்."

—என்று இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் கண்டித்திருக்கிறார் பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவரான பெவான்.

"ரஷ்யர்களை—'கடவுளை நிந்திப்பவர்கள், நாத்திகர்கள்' என்று இந்த மதத் தலைவர்கள் கூறுகின்றனர். நல்லது, நண்பர்களே! ஆனால், முதலில் நீங்கள், உங்கள் மனதில் உள்ள—நீங்கள் விரும்பிச் சேகரித்து வைத்துள்ள தவறான கொள்கைகளை அகற்றிக்கொள்ளுங்கள்! தவறான அகந்தையை அகற்றுங்கள்! போலி கௌரவத்தை விட்டொழியுங்கள்! சிந்தித்துப் பாருங்கள்! நீர்வளிக் குண்டு சோதனைகளைக் கைவிட வேண்டும்—தடை செய்ய வேண்டும் என்ற குரல், ஆண்டவனை வெறுப்பவர்களிடமிருந்தல்லவா வந்திருக்கிறது? ஆண்டவனை நேசிக்கிறோம் என்பவர்கள் அல்லவா, அந்தத் திட்டத்தை நிராகரித்திருக்கிறார்கள்? இதற்கு எந்த ஒரு கிறிஸ்தவ மந்திரியாவது பதில் அளிப்பாரா?"

என்றும் பெவான் இடி முழக்கமிட்டிருக்கிறார்.

கடமை தவறிய போலீசார் போக்கு

அமைதி காத்த தோழர்கள்மீது வழக்கு

எம். ஜி. ஆர். நாடக மன்ற நிகழ்ச்சிகள்

காரைக்குடி மகர்நோன்புப் பொட்டலில், திறந்தவெளி அரங்கில், 12—7—56 இரவு 10-30 மணிக்கு எம். ஜி. ஆர். நாடக மன்றத்தாரால் 'அட்வகேட் அமரன்' நாடகம் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் நாடகம் பார்க்க வந்திருந்தார்கள்.

டிக்கெட் கிடைக்காமல், நாடகம் பார்க்க விரும்பிய வெளியில் நின்ற மக்கள் கூட்டம் சுற்றி அமைக்கப்பட்டிருந்த தட்டிகளைப் பிய்த்துக் கொண்டு உள்ளே வர முயன்றார்கள்; இதனால் கொட்டகையினுள் குழுமியிருந்தவர்கள் சிறிது பரபரப்படைந்தார்கள்.

தோழர்கள் கண்ணதாசன், எஸ். முத்து, அ பொன்னம்பலனார் ஆகியவர்கள் மக்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டனர்.

பிறகு அமைதியான முறையில் இறுதிவரை நாடகம் நடைபெற்றது. தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் நன்றி கூறினார்; அவருக்கு தோழர் கண்ணதாசன் அவர்கள் பல மன்றங்கள் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி துண்டுகளும் வழங்கினார்.

இந்நாடகத்திற்குப் பாதுகாப்புக்காக 'ரிசர்வ்' போலீஸ், உதவிக்குக் கேட்டுக்கொண்டிருந்தும், நாடகத் தினத்தன்று கடைசி நேரத்தில், 'ரிசர்வ் போலீஸ்' உதவி மறுக்கப்பட்டு, உள்ளூர் போலீசாரை உதவிக்கு அனுப்புவதாகக் கூறி பணமும் பெற்றுக்கொண்டு, போலீசாரும் வந்திருந்தார்கள். நாடகத்தில் அமைதி ஏற்படுத்த வேண்டிய போலீசார் அமைதி ஏற்படுத்தத் தவறியதுடன், அமைதியை ஏற்படுத்திய எம். ஜி. ஆர். நாடக மன்றத் தோழர்கள்மீது வழக்கு பதிவு செய்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வருவது வியப்பாக இருக்கிறது.

★

அஞ்சுக்கோட்டையில்:

திருவாடானைப் பகுதியிலுள்ள அஞ்சுக்கோட்டைக் கிராமத்தில், 13—7—56 இரவு 11 மணிக்கு, திறந்தவெளி அரங்கில், எம். ஜி ஆர். நாடக மன்றத்தாரின் 'இன்பக்கனவு' நாடகம் சிறப்பாக நடத்தினார்கள். பெருந்திரளான மக்கள் கண்டு களித்தனர்.

வேதாரண்யத்தில் பள்ளி உதவி நாடகம்:

15-7-56 இரவு 11-30மணிக்கு அண்ணா அவர்கள் தலைமையில், எம். ஜி. ஆர். நாடக மன்றத்தினர் 'இன்பக்கனவு' நாடகத்தை சிறப்பாக நடத்தினர்.

தலைவர், நாடகக்கலை மூலம் கல்வி வளர்ச்சிக்கு நிதி திரட்ட உதவும் இந்நாடகத்திற்கு மக்கள் ஆதரவு அளிப்பதைப் பாராட்டியும், எம்.ஜி ஆர். நாடக மன்றத்தார் கலை நிகழ்ச்சி மூலம் நாட்டிற்கு நல்ல பகுத்தறிவுக் கருத்துக்களையும் சமூகசீர்திருத்தக் கருத்துக்களையும் வழங்கி வருவதை மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், நாட்டின் கல்வி வளர்ச்சிக்குப் பணியாற்றும் நிர்வாகிகளைப் பாராட்டியும், எல்லா மக்களும் தக்க ஆதரவு அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். பள்ளி நிர்வாகிகள் நன்றி கூறினர். அண்ணா அவர்கட்கும், திரு. எம். ஜி ஆர். அவர்கட்கும் மலர் மாலைகள் சூட்டினர்.

இறுதியாக தோழர் எம். ஜி. ஆர். அவர்கள் நன்றி கூறினார்; நாடகம் இனிது நடைபெற்றது.

செய்திச் சுருள்

★

தாளமுத்து—நடராசன் நினைவுப் படிப்பக ஆண்டு விழா

15—7—56 காலை 10 மணியளவில் தோழர் எஸ். முத்து தலைமையில், மதுரை தாளமுத்து—நடராசன் நினைவுப் படிப்பக 11-வது ஆண்டு விழா நடைபெற்றது. தோழர் என். எஸ். ராசா கொடியேற்றி வைத்தார். தோழர்கள் மு. வசனப்பித்தன், காஞ்சி-கல்யாணசுந்தரம் ஆகியோர் தாளமுத்து—நடராசன் மேற்கொண்ட பணியினைப் பற்றியும், இன்றைய அரசியல் நிலை பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

அழகிரி மன்றம் சேவூர் (வ. ஆ.)

17-7-56 இரவு 8 மணிக்கு தோழர் எஸ். ஏ. கைலாசன் இல்லத்தில், அழகிரி மன்றச் சார்பில் சொற்பயிற்சிக் கூட்டம், தோழர் ஏ. கே. குமாரவேலன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வி. பரசுராமன், சி. என். சானகிராமன், எம். ஏ. செயராமன், எஸ். ஜி. கோபாலன், எஸ், ஏ. கைலாசன் ஆகியோர் 'நட்பு' என்பது குறித்துப்பேசினர். இறுதியில், திங்களிருமுறை சொற்பயிற்சிக்கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

பயிற்சியில் கலந்துகொள்வோர் 25-7-56-க்குள் மன்றச் செயலாளரிடம் பதிவு செய்துகொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வடசென்னை மருத்துவகுல முன்னேற்ற சங்கம்

தமிழ் நாடு மருத்துவர் சங்க மாநில மாநாடு ஆகஸ்டு மாதம் நடக்கவிருப்பதையொட்டி 17-7-56-ல், தோழர் சி கோவிந்தசாமி அவர்களால், ஜி. ஏ. ரோடு, எண் 76 இல்லத்தில் தொண்டர் படை கூட்டப்பட்டது. தோழர் ஏ. சபாபதி தலைமை வகித்தார். தோழர்கள் எம். ஏ. இராமகிருஷ்ணன், குப்புசாமி, பி. கோவிந்தசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருமணம்

13—7—56 காலை 9 மணிக்கு அம்மையப்பனில், தோழர் எஸ். கந்தசாமி தலைமையில், தோழர் நாகராசன்—தோழியர் மீனாட்சி திருமணம் நடைபெற்றது. தோழர்கள் இரா. அன்புராயன், எஸ் எம். வைத்திலிங்கம், அ. நடராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமணத்தின் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

கழகச் செய்திகள்

ஒடுவன்குறிச்சியில் தி. மு. கழகம் துவக்கம்

15—7—56 பகல் 1 மணிக்கு இராசிபுரம் வட்டம் ஒடுவன்குறிச்சி கிராமத்தில், தோழர் சொ ரா. சொக்கலிங்கம் இல்லத்தில், தி. மு. கழகக் கிளை அமைப்புக் கூட்டம் தோழர் பி. ஏ. கிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சொ. ரா. சொக்கலிங்கம், கா. பெரியசாமி, மு. மாணிக்கம், அ செ கந்தசாமி ஆகியோர் முறையே செய[illegible] செய[illegible]ளர், மாவட்டப் பிரதிநிதியாகவும், தோழர்கள் செ. காளியப்பன், மு. செங்கோடன், சொ. அர்த்தனாரி, பெ. முத்துசாமி, மா. பழனியப்பன், சி. ராமசாமி, மா. வெங்கடாசலம் ஆகியோர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

போடிநாயக்கனூர் தி.மு.க.

19—7—56 இரவு 10 மணிக்கு, தோழர் எம். [illegible] தோழர் [illegible] முத்து தலைமையில் நடைபெற்ற நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில், ஆரம்ப முதல் இன்று வரையுள்ள வரவு-செலவுக் கணக்குகள் சரிபார்த்து ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், தோழர்கள் எம். கந்தசாமி, எம். கே. சி. கலைமணி ஆகியவர்கள் தங்கள் விலகல் கடிதங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டபடியால் அவ்விருவரும் தொடர்ந்து கழகத்தில் பணியாற்றுவதென்றும், 28-7-56ல் மும்முனைப் போராட்ட நினைவுப் பொதுக்கூட்டம் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆலங்குடியில் தி. மு. கழக துவக்க விழா

16—7—56-ல் ஆலங்குடியில், தி. மு கழகக் கிளை துவக்கவிழா, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

புள்ளம்பாடி தி. மு. கழக துவக்க விழா

15—6—56 மாலை 7 மணிக்கு தோழர் தம்புசாமி தலைமையில் கிளைக் கழகத் துவக்கவிழா நடைபெற்றது. தோழர்கள் ஆ. சோமசுந்தரம், பரமசிவம், முத்துசாமி, பச்சமுத்து ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி, பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 9 பேரடங்கிய நிர்வாகக்குழுவும்தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், விரைவில் பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

வருமான வரி தராது ஏமாற்றுகிறவர்கள்

கண்டுபிடிக்க சர்க்கார் வழிகளை யோசித்துக் கொண்டிருக்கிறதாம்

வருமான வரிச் சட்டங்களின் ஓட்டைகளை அடைக்க உயர்தரக் குழு நியமிக்கப்படுமாம்

புதுடில்லி, ஜூலை 24—

வருமான வரி சட்டங்கள் எளிதான முறையில் இருக்குமாறு செய்யவும், சரியான முறையில் செயல்படுமாறு செய்யவும் இந்திய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

இதற்காக வருமான வரி சட்டங்களை ஒழுங்குபடுத்தித் தொகுப்பதற்கு உயர்தர அதிகாரம் கொண்ட குழு ஒன்றை நியமிக்கவும் இந்திய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

வருமான வரி நிர்வாகத்துறையின் வேலைமுறையைப்பற்றி விசாரணை செய்யக் குழு ஒன்றை நியமிக்க வேண்டுமெனக் கோரும் தீர்மானமொன்று மக்கள் சபையில் கொண்டுவரப்பட்டபோது, இத்தகவலை, வருமான—செலவினத் துறை அமைச்சர் தெரிவித்து விட்டு மேலும் சொன்னார் :—

"வருமான வரி நிருவாகத் துறை வேலை முறைகளை ஆராய்ந்து வருமாறு ஏற்கனவே சுவீடன், சப்பான், அமெரிக்காவிற்கு மூன்று அதிகாரிகளை அரசாங்கம் அனுப்பி இருக்கிறது; மற்றொரு அதிகாரியும் அனுப்பப்படுவார்.

"வருமான வரி செலுத்தாமல் ஏமாற்றுகிறவர்களைக் கண்டுபிடிக்க என்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வது என்பதுபற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

"வருமான வரி செலுத்தாமல் ஏமாற்றுகிறவர்கள் இல்லையென்று ஒருபோதும் நாங்கள் சொல்லவில்லை; ஆனால், வரி கொடுக்காமல் ஏமாற்றப்படுகிற வழியில் 30 முதல் 40 கோடி ரூபாய்தான் ஒளித்து வைக்கப்படுகிறது என்று நாங்கள் கூறுகிறோம்.

"இந்தியாவில் 200 முதல் 300 கோடி ரூபாய் வருமான வரி கொடுக்கப்படாமல் ஏமாற்றப்படுகிறதென்று பிரிட்டன் பொருளாதார நிபுணர் பேராசிரியர் கால்டார்ஸ் கூறியிருக்கிறார். இவருடைய அறிக்கையை அரசாங்கம் பரி[illegible] வருகிறது

இது அச்சிடப்பட்டு விரைவில் உறுப்பினர்கள் அனைவருக்கும் விநியோகிக்கப்படும்.

"வருமான வரி ஏய்ப்புக்கு பல முறைகள் கையாளப்படுகின்றன; ஒன்று, சட்ட விரோதமான வழி; இச்சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை இவர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர்; பொய்க்கணக்கு தயாரித்து, வருமானத்தை ஒளித்து வைப்பது மற்றொரு முறையாகும்......"

கிருபளானி: 'மூன்றாவது முறையும் இருக்கிறது—அதாவது, அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுப்பது.'

அமைச்சர் : "சர்க்கார் சமீபத்தில் மேலும் வருமான வரி அதிகாரிகளை நியமித்திருக்கின்றனர். 1954-ல், 550 அதிகாரிகளே இருந்தனர்; தற்போது 1,200 அதிகாரிகள் இருக்கின்றனர். வருமான வரி பாக்கிகள் அனைத்தையும் வசூலிப்பதற்கு நாங்கள் முழு முயற்சி செய்துவருகிறோம்."

போதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

ஜூலை 24 : மாஞ்சம்பதி
25 : திருவோத்தூர்

இந்த எதிர்ப்புப் புரிய...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பெம்மான் !

இந்திப் பிரச்சாரகர்கள் கூட்டத்தில்தான், காமராசர் இந்தக் கருத்துமழையைப் பொழிந்திருக்கிறார்.

மேலும் அவர் கூறினாராம்—'இந்தி, இதர மொழிகள்மீது ஆதிக்கம் செலுத்தும் என்று கூறுவது சரியல்ல'—என்று!

"எந்த ஒருமொழியும் பிறமொழி மீது ஆதிக்கம் செலுத்த முடியா[illegible] எப்படி ஆதிக்கம் செலுத்த முய[illegible] எதிர்ப்பைக் கிளப்புமாம்—காமரா[illegible] கூறுகிறார்!

"தமிழர்களுக்கு இந்தி மொழி அறிவு அவசியம் வேண்டுமென தெளிவாகக் கூறிட விரும்புகிறேன்,"

என்று, குரலில் தெளிவை வரவழைத்துக் கொண்டு விருப்பம் தெரிவித்தாராம், காமராசர் !

"வடநாட்டுத் தலைவர்கள்கூட, (தங்கள்) மக்கள் ஒரு தென்னாட்டு மொழியைக் கற்கவேண்டியது அவசியம் என உணர்ந்து வருகின்றனராம்!

'மொழிப் பகை, இந்தியாவின் ஒற்றுமையைச் சீர்குலைத்துவிடக் கூடாது' என்றும் அவர் கூறினாராம்!

"இந்தி மட்டும் தேசிய மொழி என்பதல்ல; இந்தியாவின் ஆட்சி மொழியாக சில காரணங்களுக்காக அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது — அவ்வளவுதான்; அதனால்தான் இதர மக்களும் அந்த மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது; இந்தியைப் பரப்புவதற்காகச் சர்க்கார், கட்டாயம் ஏதுமின்றி தன்னாலான முயற்சிகளை எல்லாம் செய்து வருகிறது" என்றும் முதன் மந்திரி கூறினாராம்!

சிலர் இந்தி பற்றிய உண்மைகளைத் தன்னலத்திற்காகத் திரித்துக் கூறுகின்றனராம்; ஆனால், மக்கள் அதுபோன்ற தவறான கருத்துக்களை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று தனக்கு நம்பிக்கை இருக்கிறதென்றும் கூறியிருக்கிறார், காமராசர்!

கட்ச் மாநிலத்தில் நில நடுக்கம்

பலியானோர் எண்ணிக்கை உயருகிறது

10,000 பேர் வீடிழந்தனராம்

பூஞ்ச், ஜூலை 21—

கடந்த சனியன்று கட்ச் மாநிலத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தினால், அஞ்சார் நகரத்தில் மட்டும் 102 பேர்களும், சுற்றுப்புற கிராமங்களில் 7 பேர்களும் ஆக மொத்தம் 109 பேர்கள் உயிரிழந்தவர்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

சுமார் 400 கால்நடைகளும் இந்த நில நடுக்கத்திற்குப் பலியானதுடன், சுமார் ஒரு கோடிரூபாய் பொருள் நஷ்டமும் ஏற்பட்டதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

அஞ்சார் நகரில் மட்டும் சுமார் 10,000 பேர்கள் வீடிழந்து தவிக்கின்றனர் என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிவாரண வேலைகளைத் தீவிரமாகவும், துரிதமாகவும் கட்ச் அதிகாரிகள் செய்து வருகின்றனர் என்றும் அறிக்கை கூறுகிறது.

இறந்துபட்டவர்களின் எண்ணிக்கை இன்னும் முழுவதுமாகக் கணக்கிடப்படவில்லை என்றும், புதைந்துபோன பிணங்களைத் தோண்டி எடுக்கும் வேலை இன்னும் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

கழகக் கூட்டங்கள்

★

திருவைகுண்டம் :

பொருணையாறு மணல் வெளி
26-7-56 இரவு 7 மணிக்கு

தலைவர் :
நெல்லையப்பன்

பேசுவோர் :
மு. கருணாநிதி
எஸ். முத்து

அன்று மாலை 4-மணிக்கு புதுக்குடியிலிருந்து ஊர்வலம் புறப்படும்; சிலம்பக் கலை விழா நடைபெறும்.

★

கோபி :

பெரியார் மைதானம்
26-7-56 இரவு 7 மணிக்கு

பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு

மு. கருணாநிதி

சுற்றுப்பயணம்

ஜூலை 26 : திருவைகுண்டம்
27 : முக்கூடல்
28 : ஓய்வு
29 : இராசபாளையம்—இரவு--சத்திரப்பட்டி
30 : சங்கரன்கோயில்

(இவ்வூர்களின் நிகழ்ச்சிகளில் மதுரை தோழர் எஸ். முத்து அவர்களும் கலந்துகொள்வார்)

திருச்செந்தூர் திருவைகுண்டம்

வட்டார தி.மு.க. தோழர்களுக்கு :

"27-6-56 காலை 10 மணியளவில், மதுரை தோழர் எஸ். முத்து அவர்கள் தலைமையிலும், தோழர் மு. கருணாநிதி அவர்கள் முன்னிலையிலும், திருச்செந்தூர், திருவைகுண்டம் வட்டாரத் தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும். அதுபோது, வரப்போகும் பொதுத்தேர்தலில், வட்டாரத் தோழர்களின் பணிகள் குறித்து விவாதித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டியிருப்பதால், வட்டாரக் கிளைக் கழகப் பிரதிநிதிகள், அவசியம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்,"

என்று, திருவைகுண்டம் தி. மு. க. செயலாளர் தோழர் வ. செகவீரராசேந்திரம் அவர்கள் அறிவிக்கிறார்.

திருக்குறள் வகுப்பு

25-7-56 மாலை 6-மணிக்கு, சென்னை—புரசைவாக்கம், வெள்ளாளத் தெரு, எண் 100, தொண்டை மண்டல வேளாளர் சங்கத்தில், பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

'கிரேன்' ஊழியர்கள் வேலை நிறுத்தம்

பம்பாய், ஜூலை 23—

பம்பாய் துறைமுகத்தைச் சேர்ந்த 300 'கிரேன்' ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனராம்; ஆனால், சாமான்கள் ஏற்றப்படுவது அதிகமாகப் பாதிக்கப்படவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

23,800 அடி உயரமுள்ள மற்றுமோர் சிகரம்

இராவல்பிண்டி, ஜூலை 23—

இமயத்தில், காரகோரம் மலைத் தொடரில், 23,800 அடி உயரத்தில், மிகவும் செங்குத்தாக உள்ள முஜ்டாக் மலையுச்சியை, பிரிட்டிஷ் மலையேறும் குழுவினர் எட்டிப் பிடித்துவிட்டதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

வள்ளுவர்வாரவிழாவில் அன்பழகன்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கொண்டாட வேண்டும்; ஏழை எளியவர்கள்; பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்தோர் அனைவரும் வள்ளுவரைப் புரிந்துகொள்ள வேண்டும்.

"ஜூலைத் திங்கள் இறுதி வாரத்தை வள்ளுவர் வாரமாகக் கொண்டாட வேண்டுமென்று இரண்டு ஆண்டுகட்கு முன்னர் நடைபெற்ற தமிழாசிரியர் மாநாடு தீர்மானித்தது. ஜூலைத் திங்கள் இறுதி வாரத்தில் விழா கொண்டாடினால், கோடை விடுமுறை முடிந்து, பள்ளி மாணவர்கள் பள்ளி துவங்கியதும், முதல் விழாவாக வள்ளுவருக்கு விழா எடுப்பர்! கல்லூரிகளிலும் மாணவர்கள் வள்ளுவருக்கு முதல் விழா கொண்டாடுவர்! அம்மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய நாவலர் சோமசுந்தர பாரதியார், ஜூலைத் திங்கள் இறுதி வாரத்தில் ஓர் நாள் வள்ளுவர் வார நாளாக விடுமுறை விடுமாறு கேட்டுக்கொண்டார். இப்போது நடைபெறுவது நல்ல தமிழர் ஆட்சி—பச்சைத் தமிழர் ஆட்சி' என்கிறார்கள்; இந்தப் 'பச்சைத் தமிழர்' எதற்கும் வாய்மூடி மௌனியாகவேயிருக்கிறார்.

"இவருக்கு முன்னால் இருந்தவர் 'டுப்ளிகேட்' தமிழர்! சட்ட சபையிலே வள்ளுவர் நாள் விடுமுறை பற்றிக் கேட்டபோது, ஆச்சாரியார் கூறினார்—'அடிக்கடி விடுமுறை விட்டால் மக்கள் சோம்பேறிகளாகிவிடுவார்கள்,' என்று! 'இராமஜெயந்தி விடுமுறை விடுகிறீர்களே! மக்கள் சோம்பேறிகளாவில்லையா?'—என்று நாங்கள் அப்போது கேட்டோம்; என்றாலும், விடுமுறை தரப்படவில்லை.

"வள்ளுவப் பெருந்தகைக்குத் தமிழ்நாடு விழா எடுக்காவிட்டால்—விடுமுறை தந்து ஆதரவு தராவிட்டால் வேறு யார் ஆதரவு தருவார்கள்? ஆந்திர நாட்டவரா ஆதரவு தருவார்கள்? கேரள சர்க்காரா ஆதரவு தரும்? டில்லி அரசினரா ஆதரவு தருவர்? நேருவா ஆதரவு தருவார்? நேருவுக்கு நாடு முழுவதும் சுற்றிப் பார்க்கவே சரியாயிருக்கிறது. இதில் அவருக்குச் சென்னையைப் பற்றிய நினைவு எங்கே வரப்போகிறது? வந்தாலும், வள்ளுவர் வார நாள் விடுமுறைக்கும்—அவருக்கும் என்ன சம்பந்தம்? ஆகவே, வள்ளுவருக்கு நாம்தான் விழா எடுக்க வேண்டும். இல்லந்தோறும் வள்ளுவர் விழா கொண்டாட வேண்டும். குடும்பத்திலுள்ள பெரியவர்கள், பெற்றோர்கள், பெண்டிர், இளைஞர் அத்தனை பேரும் வள்ளுவர் வார நாள் கொண்டாடவேண்டும். தமிழ் நாட்டிலே ஓர் புத்துணர்ச்சி மலர வேண்டும்! நாட்டிலே எழுச்சி தேவை! அதைத்தான் நான் இந்த கூட்டத்திலே நினைவூட்ட விரும்புகிறேன்!

கிடைத்த நேரங்களிலெல்லாம் வள்ளுவரின் குறளை இயன்றவரை படித்து, முடிந்தவரை அந்த நன்னெறிகளில் நடந்து நாட்டிற்கு நல்லது செய்ய நீங்கள் முற்படவேண்டும்! வள்ளுவர் நம் வழிகாட்டி! அவர் நம்மை நன்னெறிகளில் நடத்திச் செல்லும் பெருந்தகை! அவரைப் பின்பற்றுவதே நம் கடமை! அவரின் அறத்தைப் போற்றுவதே நம் கடமை! வள்ளுவரின் அறத்தின் வழி நடப்போமாக! வாழ்க வள்ளுவர் நெறி! வாழ்க திராவிடம்!"

அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது:—

"மேல் நாட்டு தத்துவஞானிகள், அறிஞர்கள் திருக்குறளின் கருத்துக்களை அறிந்திருக்கிறார்கள். குறளின் ஒழுக்கத்தை மதிக்கிறார்கள். இங்குள்ளோரால் குறளுக்குப் போதிய மதிப்பு கிடைக்கவில்லை. வள்ளுவரைப் பற்றி மக்கள் தெரிந்திருக்கவில்லை. இங்குள்ள புலவர்கள், கவிஞர்கள், அரசியல்வாதிகள் எல்லாம் வள்ளுவரைப் பெருமைப்படுத்தவில்லை. பாரதியார் பாடலிலே, 'கம்பனைப்போல் வள்ளுவன்—இளங்கோபோல் பூமிதனில் எங்கணுமே கண்டதில்லை' என்று எழுதியுள்ளபடி வள்ளுவருக்கு ஈடாக கம்பனையும், இளங்கோவையும் மதிக்கிறார்களே தவிர, திருவள்ளுவர் நம் வழிகாட்டி என்பதை மறந்துவிடுகிறார்கள். நாம் நமக்கு ஓர் நல்ல வழிகாட்டியை தேடினால் நாமெல்லாம் நல்வாழ்வு நடத்த வேண்டுமென்றால் நமக்கு திருவள்ளுவரைக்காட்டிலும் வேறு வழிகாட்டி இல்லை!

"வள்ளுவர் ஏழை எளியவர்கள், பாட்டாளி வர்க்கத்தினர் ஆகியோரின் வழிகாட்டி; பணக்காரனின் வழிகாட்டியல்ல! வட்டிக் கடைக்காரனின் வழிகாட்டியல்ல! திருவள்ளுவர் நம் வழிகாட்டி!

"வள்ளுவப் பெருந்தகை சாதியற்ற சமுதாயம் பற்றிப் பேசியிருக்கிறார்—

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்";

என்றார் வள்ளுவர் 'ஒருவனின் தொண்டு, பிறப்பிலே ஏற்றத்தாழ்வுகள் என்ற காரணத்தினால், சிறப்புகள் பெறுவதில்லை' என்கிறார் வள்ளுவர்.

"ஒருவன் செய்கிற தொண்டிலே தான் அவனை சிறப்பிக்க வேண்டுமே தவிர, சாதி பாகுபாட்டினால் சிறப்பை கணிக்கக் கூடாதென்கிறார்! ஏழை-பணக்காரன் பேதத்தை நிலைநாட்டக் கூடாதென்கிறார்! எவனாவது ஒருவன் பிச்சை எடுத்துத்தான் உயிர் வாழவேண்டும் என்ற நிலையை ஆண்டவன் படைத்தானானால் அந்த ஆண்டவனை ஏற்கலாகாதென்கிறார். பிச்சை எடுத்து வாழும்படி ஒருவனை தெய்வம் படைத்திருந்தால் அந்தத் தெய்வமும் அலைந்து, திரிந்து துன்பம் அனுபவித்து கெடட்டும் என்கிறார் வள்ளுவர் !

'இரந்தும் உயிர்வாழ்தல்வேண்டின்—பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்று ஆண்டவனை அழிந்து போகச் சொல்கிறார்.

"பலரின் கண்களிலே புனல் பொங்க, எலும்பும் தோலுமாகி, நாட்டிலே நடைப்பிணங்களாகித் திரியும் நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமென்கிறார் திருவள்ளுவர்.

"வாழ்க்கைச் சம்பவத்தையொட்டி வள்ளுவர் கூறியபடி எந்தப் புலவரும் கூறினதில்லை. பிற்காலத்தில் புலவர்களும், பாரதியார், பாரதிதாசன், தேசிக விநாயகம்பிள்ளை, நாமக்கல்-இராமலிங்கம் பிள்ளை போன்றவர்களும் வள்ளுவரின் அடிப்படையிலே தங்கள் கருத்தை சொன்னார்களே தவிர, வேறு, வள்ளுவர் கூறுவதை சொல்லவில்லை."

அடுத்து அன்பழகன் அவர்கள் கடவுளின் தன்மையை வள்ளுவர் சித்தரிப்பதையும், அறியாமையால் மக்கள் செய்யும் காரியங்களை விளக்கியும், வள்ளுவரின் சிறந்த கருத்துக்களை நாம் கடைபிடித்து நல்லொழுக்கங்களில் நடக்க வேண்டுமென்று கூறியும், ஜூலை திங்கள் இறுதி வாரத்தை வள்ளுவர் வாரமாக கொண்டாடவேண்டுமென்று கேட்டுக்கொண்டும் அரியதோர் கருத்துரை வழங்கினார்.

ஏஜெண்டுத் தோழர்களுக்கு:

மாதந்தோறும் பட்டியல் தயாரிக்க வசதியாயிருக்கும் பொருட்டு, ஒவ்வொரு மாத இறுதியில் பிரதிகளைக் கூட்டவோ, குறைக்கவோ விரும்பும் ஏஜெண்டுத் தோழர்கள், 28-ந்தேதிக்குள் தெரிவித்துவிட வேண்டுகிறோம்.

—நிர்வாகி : 'நம் நாடு'

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம், ஏ.